<u>செய்தி வெளியீடு</u>

செய்தி வெளியீடு எண்.73/2024 நாள்: 15.10.2024

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 119 இடங்களில் 133 மோட்டார்கள் மூலம் மழைநீர் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களிலும் மழைநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைப்பெற்று வருகிறது. இதன் அடிப்படையில் மண்டலம் 1 முதல் 15 வரையிலான 119 இடங்களில் 133 மோட்டார்கள் மூலம் மழைநீர் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 8 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், 130 குடிநீர் பகிர்மான நிலையங்கள், 22 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் 356 கழிவுநீர் உந்து நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படுகிறது. இந்நிலையங்களுக்கு தேவையான 102 ஜெனரேட்டர்கள் உரிய எரிப்பொருளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், அழுத்தம் குறைவான பகுதிகள், குடிநீர் திட்டப்பணிகள் நடைப்பெற்று வரும் இடங்களில் 457 லாரிகள் மூலம் 4112 நடைகள் மாலை 6 மணி வரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள 300 நிவரான மையங்கள் மற்றும் 90 சமையல் கூடங்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 8754 குடிநீர் தொட்டிகள் நீர் நிரப்பபட்டு பொது மக்கள் பயன் பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் 711 தெரு நடைகளும் வழங்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை பரிசோதனை செய்வதற்காக 900 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு உரிய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பாதுகாப்பான குடிநீர் வழங்கவது உறுதி செய்யப்படுகிறது. பருவ மழை காலங்களில் பொதுமக்கள் குடிநீரினை காய்ச்சி பருகிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

...2...

பொதுமக்கள் புகார்களை தெரிவிப்பதற்கு ஏதுவாக கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் இயங்கிவருகிறது. பொதுமக்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொண்டு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம்.

| | |
|---|---|
| **கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறை** | **044-45674567 (20 இணைப்புகள்)<br><br>கட்டணமில்லா தொலைபேசி எண். 1916** |

பருவ மழையின் போது கழிவுநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதற்காக 299 தூர்வாரும் இயந்திரங்கள், 73 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள், 225 ஜெட்ராடிங் வாகனங்கள் என மொத்தம் 597 கழிவுநீரகற்றும் இயந்திரங்கள் கழிவுநீரகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், மழைநீர் தேங்கினால் அவற்றை உடனடியாக அப்புறப்படுத்துவதற்காக பிற மாவட்டங்களிலிருந்து கூடுதலாக வரவழைக்கப்பட்ட 90 கழிவுநீர் ஊர்திகள் மழைநீர் / கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகளை 2,149 களப்பணியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in